மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதற்கான தகவல் என்னிடத்தில் இல்லை. நண்பர் சொன்னதற்குப் பிறகுதான் அதைப் பற்றி நான் விசாரிக்க வேண்டும்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஒற்றிவைப்புத் தீர்மானங்கள். 13 தீர்மானங்களுக்கு முன் அறிவிக்கைகள் வந்திருக்கின்றன. அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம். முதலாவதாக திரு. ஜார்ஜ் அவர்கள்.

(i) பாதிரிவேடு-மேல்டர்பாக்கத்தில் நடந்த நிகழ்ச்சி

THIRU V. GEORGE : Mr. Speaker, I may be permitted to move the adjournment motion, given notice by me, under Rule 42 of the Assembly Rules, viz.,

"that the business of the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the incident on the 18th and 19th March 1968 between the villagers, students and teachers of Padirvedu Meldarpakkam in Chingleput district".

MR. SPEAKER : Please explain how it is beyond the ordinary administration of the Government.

திரு. வ. ஜார்ஜ் : அவைத் தலைவர் அவர்களே, மாதர்பாக்கம் என்ற இடத்தில், போர்டு உயர்நிலைப் பாடசாலையில், தெலுங்கு பேசக்கூடிய மாணவர்களும், ஆசிரியர்களும் அதிகமாக இருக்கிறார்கள். சுமார் மூன்றில் இரண்டு பங்கு தெலுங்கு பேசுபவர்கள். ஊர் மக்களும் தெலுங்கு பேசுபவர்கள்தான் அதிகம். பாடசாலையில் உள்ள 34 ஆசிரியர்களில் 8 பேர்கள்தான் தமிழ் ஆசிரியர்கள், பாக்கி 26 பேர்களும் தெலுங்கு பேசுபவர்கள். இந்த நிலையில் மொழி உணர்ச்சி காரணமாக 18—3—1968 அன்று அங்குள்ள பாடசாலையில் பணியாற்றும் ட்ராயிங் மாஸ்டர் அவர்களையும், மாணவர்களையும் உதைத்தார்கள், தமிழ் ஆசிரியர்களும் மாணவர்களும் மறுநாள் 19—3—1968 அன்று ஊரில் உள்ள ஆட்களும் சேர்ந்து கொண்டு, அபாயமான ஆயுதங்களை வைத்துக் கொண்டு காயங்களை ஏற்படுத்தியதன் காரணமாக, பல ஆசிரியர்களும் அந்த இடத்தை விட்டு ஓடி பாதுகாப்பு தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் பாதுகாப்பு தேடினார்கள். இது சாதாரணமாக நிர்வாகத்தில் நடக்கக்கூடிய காரியம் இல்லை. இது அசாதாரணமான, முக்கியத்துவம் வாய்ந்த விஷயம். ஆகவே சபையின் அலுவல்களை ஒத்தி வைத்து இந்த விஷயத்தை விவாதிக்க வேண்டும். இந்த நிலைகள் பரிசீலிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் நடைபெற்றதாக கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது செங்கற்பட்டு மாவட்டத்தைப் பற்றியது.

1968 மார்ச் 28] [திரு. சி. என். அண்ணாதுரை]

கனம் உறுப்பினர் அவர்கள் அந்த ஊர் பெயரைக்கூட தவருக் குறிப்பிட்டார்கள். அவருக்கு அந்த ஊர் பெயரைச் சொல்லிக் கூடப் பழக்கம் இல்லைபோல் தெரிகிறது. எனக்கு அந்த ஊர் பழக்கமானது. இப்படிப்பட்ட சம்பவங்கள் அசாதாரமான சம்பவங்கள் என்று உறுப்பினர் குறிப்பிட்டார். உள்ளபடியே, சாதாரண சம்பவங்களில், விரும்பத்தகாத சம்பவங்களில் எல்லாம் சர்க்காருடைய சாதாரண நிர்வாகத்தின்கீழ் வரக்கூடியவை களுக்கு சர்க்கார் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சம்பவம் அரசினருடைய நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாக இருக்கிறது. ஆகையால் இந்தச் சம்பவம் பற்றி அரசு நடவடிக்கை எடுக்க முடியும்.

'The matter must involve more than the ordinary administration of the law'. ஆகவே, 50 (viii) விதியின்கீழ் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ii) அம்பாசமுத்திரம் வட்டத்தில் நெல் கொள்முதல் முறை

திரு. டி. எஸ். ஆதிமூலம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளில் 42-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்கக் கோரி ஓர் முன்னறிக்கை கொடுத்திருக்கிறேன்.

"திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலுகாவில் தற்போது நெல் கொள்முதல் செய்யும் முறைபற்றி விவாதிக்க வேண்டும்."

தலைவர் அவர்களே, சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அம்பாசமுத்திரம் தாலூக்காவில் உள்ள விவசாயிகளுக்கு லெவி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 8 தாலூக்காக்களுக்கும் மொத்தமாக 40 ஆயிரம் டன் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்று தீர்மானித்து, அதில் அம்பாசமுத்திரம் தாலுக்காவில் மட்டும் 9,500 டன் என்று சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. அம்பாசமுத்திரம் தாலுக்காவில் ஏராளமான அளவில் கொள்முதல் ஆகிக்கொண்டிருக்கையில் மேலும் கொள்முதல் செய்வதற்காக இரண்டாவது தடவையாக லெவி நோட்டீஸ் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு விவசாயியையும் கட்டாயப்படுத்தி கொள்முதல் செய்ய சர்க்கார் ஏஜெண்டுகளும், அதிகாரிகளும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். லெவிக்கு ஒழுங்காக நெல்லை விவசாயிகள் கொடுத்தபோதிலும், மீண்டும் மீண்டும் அவர்களிடத்திலே இருந்து நெல்லை எடுத்துக் கொண்டு போகும்படியான நிலையில் அதிகாரிகள் கெடுபிடி செய்து வருகிறார்கள். அம்பாசமுத்திரம் பகுதி, சேரன்மாதேவி பகுதி